**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.30/2020**
**Prosecution Witness P.W. 3**
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. பூமி என்ற தெய்வேந்திரன் | Calling | : கூலி |
| Father's name | : திரு. நைனான் | Religion | : இந்து |
| Village | : சருகுவலையபட்டி | Age | : 39 |
| Taluk | : மேலூர் | | |

நாள் - **25.08.2025**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

எனது சொந்த ஊர் சருகுவலையப்பட்டி. இந்த வழக்கில் இறந்து போன நைனான் என்னுடைய அப்பா. அ.சா.1 என்னுடைய அம்மா, அ.சா.2 நந்தினி எனது தங்கை, ஆஜர் எதிரி என் தம்பி. சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வெளிநாட்டில் வேலை பார்த்து கொண்டிருந்த போது என் அப்பா இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். என் அப்பாவை யார் கொலை செய்தது, என்ன காரணத்திற்காக கொலை செய்தார்கள் என்ற விபரம் தெரியாது. எதிரி மீது என்ன வழக்கு என்று எனக்கு தெரியாது. மூன்று மாதம் கழித்து நான் லீவில் வந்த போது என் அப்பா இறந்த விபரம் தெரியும்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், 06.11.2016 ம் தேதி கீழவளவு போலிசார் என்னை விசாரித்த போது, ஆஜர் எதிரி என் தம்பி என் அப்பாவிடம் கல்யாணம் பண்ணி வைக்க சொல்லலி கட்டாயப்படுத்தி கேட்டதாகவும், அதனால் 05.11.2016 ம் தேதி இரவு 8.15 மணியளவில் என் வீட்டில் என் அப்பா இருந்த போது, என் தம்பி அவரிடம் தகராறு செய்து, கெட்ட வார்த்தைகளால் திட்டி, நீ உயிரோடு இருக்கும் வரை எனக்கு கல்யாணம் ஆகாது என்று சொல்லி, கத்தியால் அவரை குத்தி அதன் காரணமாக அவர் இறந்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன்

என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி என் தம்பி என்பதால் இந்த வழக்கில் இருந்து அவரை காப்பாற்ற எனக்கு தெரிந்த உண்மைகளை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர் ஆஜர்).

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.08.26 10:10:19 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.30/2020**
**Prosecution Witness P.W. 4**

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. மணி | Calling | : கூலி |
| Father's name | : திரு. அய்யாக்கண்ணு | Religion | : இந்து |
| Village | : சருகுவலையபட்டி | Age | : 49 |
| Taluk | : மேலூர் | | |

நாள் - **25.08.2025**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

எனது சொந்த ஊர் சருகுவலையபட்டி. அ.சா.1 மற்றும் எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கில் இறந்து போன நைனான் என்பவரை எனக்கு தெரியும், அவர் எனக்கு சித்தப்பா. அவர் எப்படி இறந்தார் என்பது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது தான், அது **அ.சா.ஆ.**2 ஆகும். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது தான், அது **அ.சா.ஆ.**3 ஆகும். காவல்துறையினர் என்னிடம் வெள்ளைத்தாளில் கையொப்பம் வாங்கினார்கள், அந்த ஆவணங்களில் என்ன விபரம் இருந்தது என்பது எனக்கு தெரியாது. என்னுடன் யார் கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. மேலும், என்னிடம் காட்டப்படும் 08.11.2016 தேதியிட்ட எதிரியின் ஒப்புதல்வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.**4 ஆகும். என்னிடம் காட்டப்படும் தடயப்பொருளை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது தான், அது **அ.சா.ஆ.**5 ஆகும். என் முன்பாக எதிரியை போலிசார் கைது செய்யவில்லை, எந்த தடயப்பொருளையும் கைப்பற்றவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் என்னை விசாரித்த போது, 06.11.2016 ம் தேதி அதிகாலை 1.00 மணிக்கு கீழவளவு காவல்நிலைய குற்ற எண்.413/2016 என்ற வழக்கில் சம்பவ இடத்தில் என் முன்னிலையில் பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்ததாகவும், அதில் நானும், பிச்சான் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும், சம்பவ இடத்தில் இருந்து இரத்தம்பட்ட மண், இரத்தம்படாத மண் ஆகியவற்றை போலிசார் ஒரு அத்தாட்சியிலும் மற்றும் எதிரியை 08.11.2016 ம் தேதி எங்கள் முன்னிலையில் போலிசார் கைது செய்த போது, எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை போலிசார் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்கள் என்றும், எதிரி தன்னை கூட்டிச் சென்றால் கத்தியை வீசிய இடத்தை அடையாளம் கூறி எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னதாகவும், அதனடிப்படையில் எதிரியை அழைத்துச் சென்று இந்த வழக்கில் பயன்படுத்திய கத்தியை எடுத்து ஆஜர் செய்ததை, போலிசார் ஒரு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியதாகவும், மேற்படி இரண்டு அத்தாட்சிகளிலும் நானும் கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி எனது சித்தப்பா மகன் என்பதால் அவரை இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற எனக்கு தெரிந்த விபரங்களை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர் ஆஜர்).

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.08.26 10:10:29 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.